இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 47 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 08 – திங்கள்கிழமை 25 செப்டம்பர் 2023 – வெளியூர் 10 + 24 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 47: Thiruvalluvar Year - 2054 - Purattasi 08 - Monday 25 September 2023 - Dak 10 + 24 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.9.2023) கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:8, துளசி நகரில் ரூ.1.62 கோடி மதிப்பீட்டில் 2.04 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்பட்டு வரும் தார் சாலை பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி.கல்பனா ஆனந்தகுமார், மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் மு.பிரதாப், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## கோவை மாநகராட்சிப் பகுதிகளில்

# சாலைப் பணிகள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!

## பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவு !

**கோவை, செப். 25 -**

**தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.9.2023) கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:8, துளசி நகரில் ரூ.1.62 கோடி மதிப்பீட்டில் 2.04 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்பட்டு வரும் தார் சாலை பணியினையும், வார்டு எண்:5, நஞ்சப்பா நகரில் உள்ள வி.கே.வி. நகரில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் 2.21 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டு வரும் தார் சாலை பணியினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளின் முன்னேற்றம் குறித்து வாரந்தோறும் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடத்தி, பணி முன்னேற்றம் குறித்த அறிக்கையினை அளிக்குமாறு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருந்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 19.9.2023 அன்று தலைமைச் செயலகத்தில், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், முதலமைச்சர் அவர்கள் பேசும் போது, மழைநீர் வடிகால் பணிகள், குடிநீர் வாரியப் பணிகள், மின் வாரியப் பணிகள் என பல்வேறு பணிகள் காரணமாக மட்டுமல்லாமல், பொதுவாக பழைய சாலைகளின் நிலை போதிய பராமரிப்பு இல்லாமல் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள், இந்த நிலை மாற்றப்படவேண்டும் என்றும், நம் மாநில சாலைகள் தரமானதாக, மக்கள் பாராட்டப்படும் வகையில் அமைக்கப்படவேண்டும் என்றும் அன்றைய ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தினார்.

அமைச்சர் பெருமக்களும், அரசு செயலாளர்களும், துறைத் தலைவர்களும் இதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்றும், இதனை கள ஆய்வு செய்தும், பணி முன்னேற்றம் கூட்டங்கள் நடத்தியும் உறுதி செய்ய திட்டமிட்டவுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

மேலும், சுற்றுப்பயணம் செய்ய அனைத்து மாவட்டங்களிலும், இது தொடர்பாக நேரடியாக ஆய்வு செய்ய முடிவு செய்திருப்பதாகவும், சாலைப்பணிகள் மேற்கொள்ளும் துறைகள் அனைத்தும் துரிதமாக, தரமாக பணிகளை மேற்கொண்டு முடிக்கவேண்டும் என்றும் கண்டிப்போடு தெரிவித்திருந்தார்.

அதன் அடிப்படையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 21.09.2023 அன்று சென்னை, மாநகரில் சாலைப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து நேற்று, கோயம்புத்தூர் மாநகராட்சியின் சார்பில், மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு: -

> **“வி.கே.வி. நகரில் 25 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதற்கு அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மிகுந்த நன்றியைத் தெரிவித்ததோடு, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ரூ.1000 வழங்கியதற்கும் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.”**

**கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண் 8, துளசி நகர் சாலைப் பணி**

மாநகராட்சி வார்டு எண்:8, துளசி நகரில் 202324ஆம் ஆண்டிற்கான மாநில நிதி குழு நிதியின் கீழ் ரூ.1.62 கோடி மதிப்பீட்டில் 2.04 கி.மீ. நீளத்திற்கு தார் சாலை அமைக்கப்பட்டு வரும் பணியினை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இப்பணிகள் கடந்த 05.09.2023 அன்று தொடங்கப்பட்டு நிறைவுறும் தருவாயில் உள்ளது.

**கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண் 5, நஞ்சப்பா நகர் சாலைப் பணி**

அதனைத் தொடர்ந்து, மாநில நிதி குழு நிதியின் கீழ் வார்டு எண்: 5, நஞ்சப்பா நகரில் உள்ள வி.கே.வி. நகரில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் 2.21 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டு வரும் தார் சாலை பணியினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

வி.கே.வி. நகரில் 25 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதற்கு அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மிகுந்த நன்றியைத் தெரிவித்ததோடு, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ரூ.1000 வழங்கியதற்கும் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

சாலைப் பணிகளை ஆய்வு மேற்கொண்ட முதலமைச்சர் அவர்கள், அனைத்துப் பணிகளையும் வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாக தாமதப்படுத்தாமல் முடிக்கப்பட வேண்டும் என்றும், நகராட்சி நிர்வாகத் துறை, நெடுஞ்சாலைத் துறை, ஊரக வளர்ச்சித் துறை ஆகிய துறைகளின் அலுவலர்கள், போக்குவரத்து காவல்துறை, மின்வாரியம், குடிநீர் வழங்கல் வாரியம், தொலை தொடர்புத் துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றி, சாலைப் பணிகளை விரைந்து முடித்திட வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர், மாநகராட்சி ஆணையர் உள்ளிட்ட அலுவலர்களை அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி, கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி.கல்பனா ஆனந்தகுமார், மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் மு.பிரதாப், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

### சந்திரயான் - 3

## லேண்டர், ரோவர் செயல்பாட்டுக்கு வர வாய்ப்பு உள்ளது!

### இஸ்ரோ தலைவர் சோம்நாத் தகவல்!

*பெங்களூரு, செப். 25 -*

*நிலவின் தென் துருவத்தில் ஆய்வுப்பணியில் ஈடுபட்ட சந்திரயான் - 3 விண்கலத்தின் லேண்டர், ரோவர் கருவிகள் சூரிய சக்தி மூலம் இயங்கும் திறன் கொண்டதாக வடிவமைக்கப்பட்டு இருந்தது.*

*இதனால் லேண்டர், ரோவர் நிலவில் தரையிறங்கிய அடுத்த 14 நாட்களுக்கு தனது பணிகளை திட்டமிட்டபடி செய்து அந்த தகவல்களை இஸ்ரோவிற்கு அனுப்பி வைத்தது. பின்னர் நிலவில் இரவு காலம் தொடங்கியதால் லேண்டர், ரோவர் உறக்க நிலைக்கு கொண்டு செல்லப்பட்டது. தற்போது பகல் பொழுது தொடங்கிய நிலையில் அவற்றை உறக்க நிலையில் இருந்து விழிக்க செய்யும் பணிகளில் இஸ்ரோ விஞ்ஞானிகள் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்கள்.*

*இது தொடர்பாக இஸ்ரோ தலைவர் சோம்நாத் கூறுகையில், லேண்டர், ரோவரிடம் இருந்து இதுவரை எந்த சமிக்ஞையும் இல்லை. ஆனால் அது வராது என்று என்னால் கூற முடியாது. முழு சந்திர நாள் வரையும் (14 பூமி நாட்கள்) நாம் காத்திருக்க வேண்டும்.*

*ஏனெனில் அந்த காலம் முழுவதும் சூரிய ஒளி தொடர்ந்து இருக்கும், அதாவது வெப்பநிலை மட்டுமே உயரும். வெப்பநிலை அதிகரிக்கும் வரை, உள்ளே உள்ள அமைப்புகள் வெப்பமடைவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்று கூறினார்.*

---

### மத்தியபிரதேசம் - ராஜஸ்தான் - சதீஷ்கர் - தெலுங்கானா

## 4 மாநில தேர்தல்களில் காங்கிரஸ் வெற்றி பெறும்!

### ராகுல்காந்தி பேட்டி!



**புதுடெல்லி, செப். 25 -**

**மத்தியபிரதேசம், ராஜஸ்தான், சதீஷ்கர் மற்றும் தெலுங்கானா மாநிலங்களில் நடைபெறும் மாநில சட்டமன்றத் தேர்தல்களில் காங்கிரஸ் நிச்சயம் வெற்றி பெறும் என்று புதுடெல்லியில் செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கையில் ராகுல் காந்தி தெரிவித்தார்.**

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் காங்கிரஸ் கட்சி அலுவலகம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியில் ராகுல் காந்தி கலந்து கொண்டு பேசுகையில்,

இந்தியாவின் பெயரை பாரதம் என மாற்றுவதற்காக நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் அதற்கு பதிலாக மகளிர் இடஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்பட்டு உள்ளதாகத் தெரிவித்தார்.

மகளிர் இடஒதுக்கீட்டை இன்று கூட அமல்படுத்தலாம், ஆனால் தொகுதி மறுவரையறை மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு என்ற பெயரில் 10 ஆண்டுகளுக்கு தள்ளிப்போட பா.ஜ.க. அரசு விரும்புகிறது என்றும் அவர் விமர்சித்தார்.

24 மணி நேரமும் இதர பிற்படுத்தப்பட்டோர் குறித்து பேசும் பிரதமர் மோடி, சாதிவாரி கணக்கெடுப்புக்கு நடத்த அஞ்சுவது ஏன் என்றும் ராகுல் காந்தி கேள்வி எழுப்பினார். மக்களவையில் சாதிவாரி கணக்கெடுப்பு விவகாரத்தை தான் எழுப்பியபோது, பா.ஜ.க. எம்.பி.க்கள் தனது குரலை ஒடுக்க முயற்சித்தனர் என்றும் ராகுல் காந்தி தெரிவித்தார்.

முன்னதாக புதுடெல்லியில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளிக்கையில், மத்தியபிரதேசம், ராஜஸ்தான், சதீஷ்கர் மற்றும் தெலுங்கானாவில் நடைபெற உள்ள சட்டசபை தேர்தல்களில் காங்கிரஸ் நிச்சயம் வெற்றி பெறும் என உறுதிபட தெரிவித்தார்.

---

### சென்னை - நெல்லை இடையே

## ‘வந்தே பாரத்’ ரெயில் சேவை துவக்கம்!

*நெல்லை, செப். 25 -*

*இந்திய ரெயில்வே துறை சார்பில் ரெயில் பயணத்தை மேம்படுத்தும் வகையில், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட, உலகத்தரத்துடன் நவீன வசதிகளுடன் கூடிய வந்தே பாரத் ரெயில்கள் இயக்கப்பட்டு வருகிறது.*

*அதன்படி தமிழகத்தில் முதல் வந்தே பாரத் ரெயிலான சென்னை - கோவை ரெயிலை கடந்த ஏப்ரல் மாதம் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். அதன் தொடர்ச்சியாக சென்னை - மைசூரு இடையே வந்தே பாரத் ரெயில் சேவை தொடங்கப்பட்டது.*

*தென் மாவட்டங்களுக்கும் வந்தே பாரத் ரெயில் இயக்க வேண்டும் என்று நெல்லை உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து பயணிகள் கோரிக்கை வலுத்தது. அதன் அடிப்படையில் நெல்லை - சென்னை இடையே வந்தே பாரத் ரெயில் இயக்க ரெயில்வே துறை அனுமதி அளித்தது.*

*அதனைத் தொடர்ந்து நெல்லை - சென்னை வந்தே பாரத் ரெயில் இயக்கத்தின் தொடக்க விழா நேற்று நெல்லை சந்திப்பு ரெயில் நிலையத்தில் நடைபெற்றது. இந்த ரெயிலை காணொலி காட்சி வாயிலாக டெல்லியில் இருந்து பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.*